www.Padasalai.Net www.TrbTnpsc.com

# 11 - STD அரையாண்டுத் தேர்வு - 2023

பதிவு எண். 1 1 6 1 8

நேரம்: 3.00 மணி

## பொதுத்தமிழ்

மதிப்பெண்கள்: 90

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.** 14 x 1 = 14

1. 1971 ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்
அ) ஸ்டெபின் மல்லார்மே ஆ) வால்ட்விட்டின் இ) ஆற்றூர் ரவிவர்மா ஈ) பாபலோநெருடா
2. அறிவைச் சாகடித்துவிடால் மனிதன் செத்துவிடுவான் எனக் குறிப்பிடும் நூல்
அ) ராபின்கன் குருசோ ஆ) புல்லின் இதழ்கள் இ) ஃபாரன்ஹீட் 451 ஈ) கடல் புறா
3. தகப்பன்கொடி புதினத்திற்காக 2003 ஆம் ஆண்டில் தமிழக அரசின் விருது பெற்றவர்
அ) அழகிய பெரியவன் ஆ) பிரமின் ஆ) பெரியவன்கவிராயர் ஈ) ஜெயமோகன்
4. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை
அ) மதிப்புக்கூட்டுப் பொருள் ஆ) நேரடிப்பொருள்
i) அ மட்டும் சரி ii) ஆ மட்டும் சரி iii) இரண்டும் சரி iv) அ தவறு ஆ சரி
5. KVT Complex என்பது
அ) வஞ்சி, தொண்டி, கொற்கை, வளாகம்
ஆ) தொண்டி, வஞ்சி, கொற்கை, வளாகம்
இ) கொற்கை, வஞ்சி, தொண்டி, வளாகம்
ஈ) கொற்கை, தொண்டி, வஞ்சி, வளாகம்
6. காவடிச்சிந்துக்குத் தந்தை என்ற அழைக்கப்படுபவர் யார்?
அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்
7. துன்பப்படுபவர்
அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர் இ) பொருளைக்காவாதவர்
ஈ) நாவைக்காவாதவர்
8. இந்தியக்கல்வி வளர்ச்சியின் மகாசாசனம் எனப் போற்றப்படுவது?
அ) மெக்காலே கல்விக்குழு அறிக்கை ஆ) சார்லஸ்வுட் அறிக்கை
இ) ஹண்டா கல்விக்குழு அறிக்கை ஈ) ஹென்றி ஆடம்ஸ் அறிக்கை
9. நற்றிணைப் பாடலின் அடிவரையறை
அ) 3 - 6 ஆ) 9 - 12 இ) 4 - 9 ஈ) 3 - 8
10. பள்ளு இலக்கியவடிவத்தின் வேறுபெயர்
அ) உழத்திப்பாட்டு ஆ) கவிப்பாட்டு இ) வயல்பாட்டு ஈ) இயற்கைப்பாட்டு
11. உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர்
அ) வாஸ்கோடகாமா ஆ) சாமுவேல் பெப்பிசு
இ) ஆனந்தரங்கர் ஈ) அல்வாரோவெல்லோ
12. சின்னச் சீறா என்றநூலை இயற்றியவர்
அ) கடிகைமுத்துப்புலவர் ஆ) உமறுப்புலவர் இ) சீதக்காதி ஈ) பனுஅகமது மரைக்காயர்
13. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று
அ) சாழல் ஆ) சிற்றல் இ) சிறுதேர் ஈ) சிறுபறை
14. தமிழின் முதல் பாவடிவ நாடகநூல்
அ) இரகசிய வழி ஆ) மனோன்மணீயம் இ) நூல்தொகைவிளக்கம்
ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

**II. எவையேனும் 3 வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக** 3 x 2 = 6

15. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
16. தமிழர்கள் புகழ், பழியை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
17. மருந்து மரமாக இருப்பவர் யார்?மருந்து எது?
18. உழைப்பாளர்களின் தோள்வலிமையால் விளைந்தன யாவை?

**III. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி** 4 x 2 = 4

19. பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?
20. ஆனந்தரங்கனின் வர்ணனைத்திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக?
21. பட்டணத்திலும் நாட்டுப்புறத்திலும் சிறந்து விளங்குபதாகத் தாகூர் எவற்றை கூறுகிறார்?

**IV. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி** 7 x 2 = 14

22. மயங்கொலிச் சொற்களை ஒரேதொடரில் அமைத்து எழுதுக? உலை, உளை, உழை



CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

23. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க : பிண்ணாக்கு
24. மரபுச்சொல்லைத் தொடரில் அமைத்து எழுதுக - முதலைக் கண்ணீர்
25. உழுதுழுது - புணர்ச்சி விதி தருக
26. வளைஇ, உறுபகை - இலக்கணக் குறிப்பு தருக
27. ஆசிரியப்பாவிற்குரிய சீரும், தளையும் யாவை?
28. சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர் - வல்லின மெய்யை இட்டும் நீக்கியும் எழுதுக?
29. விடைக்கேற்ற வினா அமைக்க;
திரிகூடராசப்பக் கவிராயரின் குற்றாலக்குறவஞ்சி கவிதைக் கிரீடம் எனப் போற்றப்படுகிறது.
30. திருத்தக் குறியீட்டிற்குப் பொருத்தமான தமிழ் பெயரைக் கூறுக. Semicolon - ;

**V. எவையேனும் 2 வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக 2 x 4 = 8**

31. சு.வில்வரத்தினம் பாடிய பல்லாண்டு வாழ்த்து தமிழ்த்தாய்க்கு எங்ஙனம் பொருந்துகிறது?
32. மேகத்திடம் கூறுவது போலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப்பொருள் யாது?
33. தமிழகப் பெண்கள் பாடிக்கொண்டே விளையாடும் போது வெளிப்படுத்தும் மேன்மையான பண்புகளைத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?
34. இன்குலாப் 'உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்' எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.

**VI. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி 2 x 4 = 8**

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக
36. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக
37. ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக்கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை
38. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை

**VII. எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளி 3 x 4 = 12**

39. பிறிதுமொழிதலணியைச் சான்று தந்து விளக்குக
வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக?
40. பொதுவியல்திணை (அல்லது) பொருண்மொழிக் காஞ்சித் துறையை விளக்குக?
41. மையக் கருத்தைக் கூறி ஏற்புடைய நயங்கள் மூன்றை எழுதுக?
மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! ஒரு
வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே!
வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ? வெண்ணிலாவே!
கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே! பகல்
கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே!
பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! நீயும்
பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாவே! - கவிமணி
42. தமிழாக்கம் தருக
1. Education is the most powerful weapon, which you can use to change the world
2. You must be the change you wish to see in the world.
3. The weak can never forgive. Forgiveness is the attribute of the strong.
4. Nobody can hurt me without my permission

**VIII. அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக 3 x 6 = 18**

43. அ) பாதசாரிகளின் வழிநடைப் பாடலாகக் காவடிச்சிந்து உள்ளது - இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல் வழி மதிப்பீடு செய்க. **(அல்லது)**
ஆ) மருந்து என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் குறிப்பிடும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
44. அ) பௌத்தக்கல்வி, சமணக்கல்வி, மரபுவழிக்கல்வி முறைகளால் தமிழகக்கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களைக் கூறுக? **(அல்லது)**
ஆ) சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துக்ளைச் சிதறாது விளக்குக?
45. அ) தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது? **(அல்லது)**
ஆ) சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப் பகுதி கொண்டு தொகுத்தெழுதுக?

**IX. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக 4 + 2 = 6**

46. அ) 'நான் என்பாய்' - எனத்தொடங்கும் அப்துல்ரகுமான் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
**(அல்லது)** ஆ) 'பொருட்டு' என முடியும் குறளை எழுதுக.



CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com